RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22488

OPEN ACCESS

# அறவியல் நோக்கில் மணிமேகலை துறவு

இ. அன்டோ மோனிகா [அ, *], சூ.ஜா இதய ராஜா [அ]

[அ] ஆய்வு மையம் -தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா

# Manimegalai Asceticism towards Morality

I. Anto Monica [a, *], S.J. Idhayaraja [a]

[a] Research centre - St.xaviers College (Autonomous), Manonmaniam sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India

* Corresponding Author:
antomonicastv@gmail.com

Received: 18-05-2022
Revised: 22-09-2022
Accepted: 01-10-2022
Published: 09-10-2022

**ABSTRACT**

The Tamil lifestyle is based on luxury. The advent of Jain Buddhist thought introduced the way of virtuous hedonistic literature into the lifestyles of the Tamils. Especially in the literature of virtue, virtue is spoken through the words of the characters who speak through the stories that convey this. Manimegalai, one of the double kappiyams, is an arakappiyam that symbolizes Buddhist virtue. In this way, the purpose of this study is to examine the concepts in this book.

**Keywords:** Manimegalai, Tamil lifestyle, Jain, Buddhist

## முன்னுரை

ஒரு மனிதன் எந்த வாழ்க்கை வாழ்வதற்கும் தேவையான அடிப்படை உரம் தூய்மையிலே தான் இருக்கின்றது. உண்மையான மனம் உடையவனால் மட்டுமே பண்பட்ட வாழ்க்கையை வாழ முடியும். 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்று வணங்க முடியும். உள்ளத்தை விரிவாக்கிக் கொள்ள முடியும் அல்லது உள்ளத்தை விரிவடையச் செய்து அனைவரையும் விரும்பி அனைத்திற்கும் அனைத்தையும் தந்த தவறு இல்லாத வாழ்க்கை வாழ முடியும். இதனை சாத்தனார் மணிமேகலை வாயிலாக மக்களுக்கு புகட்டுகிறார்.இத்தகைய நிகழ்ச்சிகளை மேற்கொண்டுள்ள மணிமேகலை காப்பியத்தை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## அறம் விளக்கம்

ஒரு மனிதனுக்கு ஒரு தேவை ஏற்படும் போது அதை மற்றொரு மனிதர் தன்னிடம் உள்ளதை எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல் அவர்களுக்கு செய்யும் உதவியை அறம் எனப்படும். இதனை

"அறம் என்பது சட்டப்படி நான்கு சிறப்புக் கூறுகளை உடையது. ஒன்று ஏழைகளுக்கு பயன்படுவது இரண்டாவது கல்வி வளர்ச்சிக்கு பயன்படுவது மூன்றாவது சமய வளர்ச்சிக்கு பயன்படுவது நான்காவது மேற் கூறப்பட்ட மூன்று பிரிவுகளுக்கும் அப்பாற்பட்டு ஒவ்வொரு இனத்தாருக்கும் பிற வகைகளில் பயன்படக்கூடிய அறங்கள். இவற்றில் எவ்விதமான பிரிவிற்கு இந்த அறக்கொடை ஏற்பட்டாலும் அதில் பொதுநலத்தன்மை இருக்க வேண்டும்"

என்று குறிப்பிடப்படுகிறது குளங்களும் கிணறுகளும் கட்டுவது இந்துக்களிடையே உள்ள அறச் செயல் ஆகும். ஏழை மக்களுக்கு உணவு அளிப்பது, அந்தணர்களுக்கு உணவளிப்பது, அறச்சாலை அல்லது சத்திரங்கள் ஏற்படுத்துவது இன்னும் இவை போன்ற பலவும் அறம் சார்ந்த செயலாகும் என்று வாழ்வில் களஞ்சியம் குறிப்பிடுகின்றது (Balusamy, 2001).

## பசித்தீர்த்தல்

"பசி பெரும்நோய்

புலன்கள் அய்ந்தும் துன்பம்

இதையறிந்து

உண்மை இன்பம்

நிற்பாணாத்தில் திளைப்போம்"

என்று தம்மபதத்தில் பசி என்பது பெரும் நோய் என குறிப்பிடுகின்றார் (Balusamy, 2001). உலக உயிர்கள் பல பசிப்பிணியால் இறக்க நேரிடும் அதனை தடுக்கும் பாத்திரம் ஆக அமுதசுரபி படைக்கப்பட்டுள்ளது. பசியினை போக்கும் போது ஒரு குழந்தைக்கு தாய்ப்பாலை ஊட்டுவது போன்று பசியினை அறிந்து உணவு வழங்க வேண்டும். உயிர்கள் உணவு என்று இறத்தல் கூடாது என்று சாத்தனார் குறிப்பிடுகின்றார். இதனை

"தீம்பால் சுரப்போ டன் முலை போன்றே

நெஞ்சுவழிப் படுஉம் விஞ்சைப் பாத்திரம்

தன் சுரை பெய்த வாருயிர் மருத்தவர்"2

என்ற வரிகள் உணர்த்துகின்றன பிணியின் போது மணிமேகலை தாயைப் போல உணவினை வழங்க வேண்டும் அவ்வாறு வழங்கினால் உலகத்தில் பசிப்பினையினால் உயிர்கள் இறக்கநேரிடாது என்று கூறுகிறார் அதே போல் ஆபுத்திரன் கதை மூலம் பசுவானது ஏழு நாள் பாலூட்டி வளர்த்தது என்று கூறப்பட்டுள்ளது (Thuraisaamip Pillai &Vengatasaami Naattaar, 2019).

"நாவானாக்கி நண்பா லூட்டிப்

போகா தொழுநாட் புறங்காத் தோம்ப"

என்ற வரிகளின் மூலம் அஃறிணை உயிர்களுக்கு கூட பசிப்பணியை போக்கும் எண்ணம் உள்ளது. இதன் மூலம் உயிர்களின் மீது மதிப்பு கொள்ளுதல் போன்ற அறங்கள் இக்காப்பியத்தில் உணர்த்தப்படுகின்றன (Thuraisaamip Pillai &Vengatasaami Naattaar, 2019).

## இல்லற அறம்

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான் என்றுஆங்கு

ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை"

பிதிரர், தெய்வம், விருந்து, உறவினர், தான் என்ற ஐவரையும் காத்தல் இல்லறத்தான் கடமையாகும் என்று வள்ளுவர் இல்லறத்தின் பெருமையை விளக்கியுள்ளார் (Puliyur Kesigan, 2016). அதுபோல அறம் செய்வோர் இல்லற வாழ்க்கையில் இருந்து கொண்டே அறச் செயல்களைச் செய்ய வேண்டும். கணவனும் மனைவியும் இணைந்து அறச் செயல்களைச் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார். சிலப்பதிகாரத்தில் கோவலன் பிரிந்து சென்ற போது கண்ணகியால் இல்லறத்தின் கடமையை செய்ய இயலவில்லை என்று வருந்தினான். அதேபோல் மணிமேகலை காப்பியத்திலும் தருமதத்தின் கதையின் மூலம் அறச் செயல்கள் செய்யும்போது இல்லறத்தில்

இருந்து கொண்டு அறச் செயல்களைச் செய்தால் மட்டுமே அறத்தின் பயனை பெற முடியும் என்று சாத்தனார் வலியுறுத்துகின்றார்.

"மாமன் மகள்பால் வான்பொருள் காட்டி

ஆங்கவ ளவளுடன் செய்த நல்லறம்

ஓங்கிரு வானத்து மீனினும் பலவாற்"

என்ற வரிகளின் மூலம் தருமதத்தனும் விசாகையும் இணைந்து நல்லறம் புரிந்தனர் என்று கூறியுள்ளார் (Thuraisaamip Pillai &Vengatasaami Naattaar, 2019). அறம் என்பது இல்லறத்தின் ஒரு பகுதியாக விளங்குகிறது என்று சாத்தனார் குறிப்பிடுகின்றார்.

## வாழ்நாளில் செய்யக்கூடாதவை

"தீச்செயல்களிருந்து

உன்னைக் காத்துக்கொள்

ஐம்புலன்களை அடக்க

தீச்செயல் விடு"

மனிதன் தன்னுடைய செயல்களை தீயவற்றிலிருந்து விளக்கிக் கொள்ள வேண்டும். அப்போது தான் குற்றங்கள் நிகழாமல் அவனது வாழ்க்கை நன்றாக இருக்கும் என்று புத்தர் குறிப்பிடுகின்றார். இதனை

"கள்ளும் பொய்யும் களவுங் கொலையும்

தள்ளா தாகுங் காமந் தம்பால்"

என்ற வரிகளின் மூலம் கள் உண்ணக்கூடாது என்றும், பொய் பேசக்கூடாது என்றும், களவுத் தொழில் செய்யக்கூடாது என்றும், கொலைத் தொழில் செய்யக்கூடாது என்றும், பிறர் மனைவியின் மீது காமம் கொள்ளக்கூடாது என்றும் கூறுகின்றார் (Thuraisaamip Pillai &Vengatasaami Naattaar, 2019). இவ்வாறு நாம் வாழ்நாளில் விலக்கக்கூடிய ஐந்து செயல்களையும் சாத்தனார் தன்னுடைய காப்பியத்தில் ஐந்து விதமாக பிரித்துக் காட்டுகிறார்.

"நஞ்சாகிய மதுவுக்கு

அடிமையானவர்கள்

தங்கள் வேர்களைத் தாங்களே

தோண்டுகின்றனர்"

புத்தர் மதுவினை நஞ்சு என்று கூறியுள்ளார். இந்த கருத்தினை சாத்தனார் சாதுவன் வாயிலாக கூறுகின்றார். சாதுவன் கள்ளுண்ணாமையைப் பற்றி நாகரி இன மக்களுக்கு

"மயக்கும் கழுவு மன்னுயிர் கோறலும்

கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்"

உரைப்பது போல இதனை அமைத்துள்ளார் (Thuraisaamip Pillai &Vengatasaami Naattaar, 2019). அதேபோல வீடு பேறு அடைய வேண்டும் என்றால் பத்து வகையான ஒழுக்கங்களையும் கடைபிடிக்க வேண்டும் என்றும் நல்வினையின் பயன் முடிவடையும் நிலையில் தீவினையின் பயன் வந்து சேரும் என்றும் அதனால் தீவினைகள் பொருள்களின் மீது உள்ள சார்பாக அனைத்தையும் கைவிடுங்கள் என்று கூறுகிறார். நம்மால் முடிந்த உதவியை பெறுவதற்கு செய்வதால் மற்றவரின் துன்பம் நீக்கப்படும். நாம் முடிந்தவரை பிறருடைய துன்பங்களை தீர்க்க

முயற்சி செய்ய வேண்டும் மணிமேகலையில் அமுத சுரபியின் வாயிலாக யானைத்தீ பசி என்பதைக் கொண்ட காயசண்டிகையின் நோய் தீர்க்கப்படுகிறது. இருப்பவர்களுக்கு கொடுப்பதை விட இல்லாதவர்களுக்கு கொடுப்பது சிறந்த அறமாகும் என்று மணிமேகலை காப்பியத்தில் கருதப்படுகிறது.

## முடிவுரை

வாழ்வில் நிகழக்கூடிய அனைத்து துன்பங்களுக்கும் காரணம் அவர்களுடைய ஆசையே என்று எடுத்துக் கொள்ளலாம். பௌத்த மதத்தில் மிகச்சிறந்த அறமாக கூறுவது பசி துயரினை போக்குவது ஆகும். ஒரு மனிதனின் வாழ்வில் உணவு, உடை, உறைவிடம் இருந்தால் அவனது வாழ்நாள் இனிதே பயணிக்கும். அவ்வகையில் பார்க்கும்போது அவனுக்கு அத்தியாவசிய தேவையாக இருப்பது உணவு. உணவை கொடுத்தல் சிறந்த அறமாகும். அதுமட்டுமின்றி ஒரு மனிதன் வாழ்நாளில் மேற்கொள்ளக்கூடிய இல்லறம், வெறுக்கக் கூடியவை, பத்து வகை ஒழுக்கம், பிறர் துன்பம் தீர்த்தல், கள்ளுண்ணாமை என அனைத்து செயல்களையும் அச்செயல்களில் மேற்கொள்ள வேண்டிய அறத்தையும் மணிமேகலை குறிப்பிடுகின்றது. மணிமேகலை காப்பியத்தில் இது அறக்கருத்துக்கள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது.

## References


Amudhan, (2006) Aram Enappaduvadhu, New century Book house, Chennai, India

N. Balusamy, (2001) Valviyal Kalanjiyam, Tamil University, Thajavur, India

Puliyur Kesigan, (2016) Thirukural, Poompuhar Pathippagam, Chennai, India

Thuraisaamip Pillai, O.V., Vengatasaami Naattaar, N.M. (2019) Manimegalai Moolamum Uraiyum, Gowra Publications, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License